இராணுவ தலைமையகத்தை தாக்கும் முயற்சி கண்டுபிடிப்பு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 11 இதழ் 135
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-6-1994

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இராணுவ தலைமையகத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்கும் திட்டத்தில் சுமார் 300 கிலோ நிறையுடைய வெடிகுண்டு ஒன்று கொழும்பு [illegible] தமிழ் கோழைகளினால் மறைவிடமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள [illegible] தனவிக்காயுதச்செய்தி நிறுவனம் தெரிவித்தது.

தமிழ்ச் [illegible] அதிகாரிகளும் பதறிப்போயிருக்கிற [illegible] வெடிகுண்டு மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த குண்டு வைப்பதற்குப் பயன்பட்டதன் மூலம் இராணுவ

(4ம் பக்கம் பார்க்க)

வாழ்வாண மக்களுக்கு வாழ்வும் சாவும் ஒன்று

- ராய்டர் செய்தியாளர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்கு வாழ்வும் சாவும் ஒன்றாகிய நிலைமையாகி விட்டது என்று ரொய்டர் செய்திபாவர் தெரிவித்துள்ளார்.

கழுத்திலிருந்து [illegible] படகுகளிலிருந்தான் இவர்கள் பயணம் செய்ய வேண்டியுள்ளது என்றும் பொதுமக்கள் பரம்பரையாக பெரும் துன்பம் என்றும் [illegible] தெரிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவு

நாடாளுமன்றுகலைக்கப்பட்டது

ஆகஸ்ட் 16-ல் பொதுத் தேர்தல்!

விசேஷ வர்த்தமானிமூலம் ஜனாதிபதி அறிவிப்பு!!

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டது ஜனாதிபதி டி.பி விஜேதுங்க நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பான விசேட பிரகடனம் ஒன்றை வெளியிட்டார் 24-6-94 திகதியிட்ட விசேட வர்த்தமானியில் இந்த பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது

அதற்கேற்ப நாடாளுமன்றம் ஆறுமாதங்களுக்கு முன்பாகவே கலைக்கப்பட்டு விட்டது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி நாடாளுமன்றத்தான பொதுத் தேர்தல் நடைபெறும் எனவும் ஜனாதிபதி விசேட பிரகடனத்தில் அறிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி கூடும் என விசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் தாக்

(4-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றில் அமளி சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட அமளிகாரணமாக அரைமணி நேரம் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. பதவியிலிருந்து ராஜினாமா செய்த ஹலீம் இஷாக் நேற்று நாடாளுமன்றத்தில் வேட்பு எழுந்தபோதே சபையில் அமளி ஏற்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தலுக்கு முன்னர் தாக்குதல் நடைபெறுது

(கொழும்பு)

விரைவில் நடைபெறவிருக்கும் இரு தேர்தல்களின் முன்புக் வடக்கில் புலிகளின் பிடியிலுள்ள பகுதிகளை கைப்பற்ற எதுவித படை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாதென அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ.தே.கவின் 17வருட ஆட்சிக்கு பலத்த சவாலான தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் புதிய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் ஐ.தே.க.கடந்த 17 வருட ஆட்சிக்கு ஒரு பலத்த சவாலாகவே அமையப்போவதாக ப. பி. ஸி தெரிவித்தது.

ஆளும் ஐ. தே. க.வும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் இயங்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமக்குத்தான் வெற்றி என இரு கட்சிகளும் இதனால் இத்தேர்தல் ஒருபோட்டி போடக்கூடிய தேர்தலாகவே இருக்கப்போகின்றது என்றும்

(4ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றில் அமளி சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட அமளிகாரணமாக அரைமணி நேரம் சபை ஒத்தி வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. பதவியிலிருந்து ராஜினாமா செய்த ஹலீம் இஷாக் நேற்று நாடாளுமன்றத்தில் வேட்பு எழுந்தபோதே சபையில் அமளி ஏற்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகள் பகுதியில்தேர்தல்கள் நடத்துவது குறித்து ஆராய்வு!

(கொழும்பு)

வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தேர்தல்கள் நடத்துவதா? இல்லையா? என்பதை ஆராய்வதற்காக, 'அரசியல் சாசன சீர்திருத்தத்திற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு' 29-ம் திகதி புதன்கிழமை கூடவுள்ளது.

இதுகுறித்து கேற்படி குழுவில் அங்கம் வகிப்பவர்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அவர்களது ஆலோசனைகள் இக்கூட்டத்தில் ஆராயப்படுமெனவும் இதன்பின் இறுதி முடிவுக்கு வர செயற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, வலிகாமம்கிழக்கு, காங்கேசந்துறை, வலிப்

(4ம் பக்கம் பார்க்க)

காபந்து அரசுக்கு கபினட் அமைச்சரவை

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின் நியமிக்கப்படும் காபந்து அரசாங்கத்துக்கு கபினட் அந்தஸ்து கொண்ட அமைச்சர் மாத்திரமே நியமிக்கப்படவேண்டும். வேறு ஒரு

(4ம் பக்கம் பார்க்க)

6 சுதந்திரக்கட்சி எம். பி.க்கள் ராஜினாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூன்று நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ராஜினாமாச் செய்தனர்.

ஜினதாஸ நிமலால, நிலந்த கருணாரட்ன, டாக்டர் தெனிய லெனாவேரா, பிரதீப் ஹப்பல்லம, லயனல் ராஜபக்ஸ், ஹபில் இஷாக் ஆகியோரே அந்த ஆறு எம்.பிக்களாவர்.

இந்த ஆறுபேரும் நேற்றுமுன்தினம் சுதந்திரக்கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவினர். [illegible] தெரிந்ததே.

(4ம் பக்கம் பார்க்க)

உப சபாநாயகருக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

தமக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக உப சபாநாயகர் திரு. ரமினி [illegible] நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

'வி ஏ. எக்' என்ற பெயரிலேயே இந்த கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதா

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் படையினர் சோதனை தெகிவளையில் வெடிமருந்து மீட்பு

ஒருவர் 'சயனைட்' அருந்தி மரணம்

(கொழும்பு)

கொழும்பு-கொள்ளுப்பிட்டி காலி வீதியில் நேற்று பாதுகாப்புப் படையினர் சந்தேகத்துக்குரிய வாகனம் ஒன்றை இடைமறித்து சோதனைசெய்த போது வாகனத்தில் இருந்த ஒருவர் 'சயனைட்' உட்கொண்டதால் பாதுகாப்பு படையினர் நேற்றுத் தெரிவித்தன.

கொள்ளுப்பிட்டி உள்ள சோதனை நிலையம் ஒன்றில் மேற்படி வாகனம் மறிக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஈ)

வரிவிளம்பரம்

தேவை

மதுபான வேலையில் அனுபவமுள்ள கெண்டிக்கார தேவை. யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை விளம்பர இல. எ-4164, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(எ-4164)

சமையல் செய்வோர் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான சைவ உணவகத்திற்கு "கவிற்" தயாரிப்பதற்கும், ஆரைகள் வேலை உணவு தயாரித்தலுக்கும் அனுபவமிக்கவர் தேவை. சம்பளம் விரும்பத்தக்கது. நிறையடிப்படையில் சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். விபரங்களுக்கு நேரில் வருக தரவும். ஸ்ரீ தயோதர விநாயகர், வடிவேலன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-4167

குடிநீர் விநியோகம்

(அறிவிப்பு)

யாழ். மாநகரபுறநீர் கூட்டுத் தாபனத்திற்கு முன்பாகவுள்ள குடிநீர் மோட்டார் கைவிடு பழுதடைந்துள்ளதால் குடிநீர் தினமும் விநியோகமாகிவருவது தாங்கள் வாடிக்கையாளர்கள் புரிந்து செய்துகொள்ளவும். (59)

இடம்பெயர்ந்த மக்களுக்கு குடியேற்றவிடம்

(உடுவில்)

தெல்லிப்பழை பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக மல்லாகத்தில் உருவாக்கப்பட்ட குடியேற்றவிடம் கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு மேலதிகாரி துக்கையா மேற்படி குடியேற்றத்தை திறந்து வைத்தார். பொறுப்பாளர் திரு. நவீன் திறந்துவைத்தார். (109)

கருத்தரங்கு

(பருத்தித்துறை)

புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் பேஷாக்கு வாரத்தையொட்டி புலோலி மக்களுக்கான "பேஷாக்கும் பொதுக் காரியமும்" என்ற கருத்தரங்கும் இக்கிராமத்தில் முதன் முதலாக பருத்தித்துறைமாவட்ட மட்டத்தில் எஸ் எதிரவேற்பியின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. —52

மாதாந்த உதவிப்பணம்

(அறிவிப்பு)

தீவகம் பகுதியைச் சேர்ந்த மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்குள்ளான கொடுப்பனவு கடந்த மாத் பிரதம தபால் அலுவலகத்திலுள்ள தீவக தபால் நிலையங்களில் வைத்து வழங்கப்பட்டுவருகின்றது. -59

மெய்வல்லுநர் போட்டி

(உடுவில்)

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் இரண்டாம் இவ்வாண்டுக்கான இடைநிலை மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 25ம் திகதி சனிக்கிழமை காலை 1-30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும். (109)

தமிழ்த்தின போட்டி முடிவு

(உடுவில்)

தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் கவிதைப் போட்டி அருணோதயா வித்தியாலயம் எடுத்து இடம் பெற்றுள்ளது.

பிரிவு: 1: வாசிப்பு: கி. ஜிஜிதா 1ம் இடம். பேச்சு: கி. ஜிஜிதா 2ம் இடம், வாசிப்பு: த. சோபனி 2ம் இடம்.

பிரிவு 2: வாசிப்பு: பா. லலிதா சினி 1ம் இடம். பாஒதல்: பா. லலிதாசினி 2ம் இடம்

பிரிவு 3: கவிதை: க. ரேணுகா 1ம் இடம், பாஒதல்: க. பிரதீபா 2ம் இடம்.

திறந்த போட்டி: நாடகம்: சமூகவிழிப்பு 2ம் இடம். -109

நல்லெண்ணெய் உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்ட கருவேலங் கண்டல் என்னும் இடத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வருடாந்தம் பருத்தி எண்ணெய் செக்கு அமைத்து, நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றது.

இந்த எண்ணெய் செக்குக்கு வேண்டிய எள் இந்த மாவட்டத்திலும், வடமாகாணத்திலும் ஏராளமாகக் கிடைப்பதனால் இத்திட்டம் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.

ஆண்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் அறிவோர் கூடவிளாரில் மூன்றாவது ஆண்டு விழா வைத்திய கலாநிதி எம். வே. முருகானந்தன் தலைமையில் புலோலி கிழக்கு இல்லத்தில் நடைபெற்றது.

திரு: எம். இரத்தினசோதி வரவேற்புரை நிகழ்த்தினார். குடும்பிமலை ஐ. சண்முகலிங்கம் "இலக்கிய அமைப்புக்களின் எனது அனுபவங்கள்" பற்றி உரையாற்றினார்.

பேராசிரியர் வ. செல்வநாயகி தொகுப்புரை நிகழ்த்தினார். -52

கொள்ளை நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோழிகளுக்கு ஏற்படும் கொள்ளை நோய்க்கெதிராகத் தடுப்பூசி மருந்துகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் சென்ற மாதம் செம்மணிக்கு மேலாக செயலகத்தில் வைத்தும் வாகனங்களிலும் சனசமூக நிலையத்தில் வைத்தும் 1300 க்கும் மேற்பட்ட கோழிகளுக்கு இந்நோய் தடுப்பூசியை போட்டுள்ளனர்.

மதிப்பீடு

(உடுவில்)

உடுவில் கல்வி வலயத்தில் தொழில் நுட்பக் கல்வி ஆக்கமுறைப்போட்டிகளுக்கு என தரம் 8 கல்வி ஆண்டுப் பொருள் மதிப்பீடுகள் ஜூன் 30ம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மதிப்பீடு செய்வதற்கு உரிய வகையில் பொருட்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பாடசாலைகளில் இருந்து பங்குபற்றும் ஆசிரியர்கள் மாணவர்களையும் கதிரை ஆக்கப் பொருட்களுடன் அன்றைய தினம் பங்குபற்றுமாறு சமூகம் தருமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். கிருபாகரன் அறிவித்துள்ளார். -109

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

உயர் கல்விப் வணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்களை பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 ஜூலை 21ஆம் தேதி வரை எங்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்!

ரூபா 7,950—10X250—10,450/-

(மாதமொன்றுக்கு)

தகைமைகள்:

(அ) அங்கீகரிக்கப்பட்ட கல்லூரி கழக பொறியியல் உயர் கல்விப்பீடத்தில் அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமையுடன் சித்தியடைந்தமைக்கான பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிர்வாகத் திட்டங்களை ஒழுங்குபடுத்தி, செயற்படுத்துவதில் 12 ஆண்டு அனுபவம். அல்லது

(ஆ) அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்தின் அல்லது உயர் தொழிற் தகைமைகளுடன் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக் கழக பொறியியல் பட்டதாரியாக இருப்பதுடன் அப்பட்டங்களைப் பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிர்வாகத் திட்டங்களை ஒழுங்குபடுத்தி, செயற்படுத்துவதில் 15 ஆண்டு அனுபவம்.

வயது:

45 ஆண்டுகளுக்கு மேற்படாமலாது.

தெரிவு:

நேர்முகப் பரீட்சை மூலம்.

மேற்குறிப்பிட்ட சம்பளத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் தேதிவரை சம்பளத்தின் 25 சதவீதம் செலுத்தப்படும்.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் 564ஆம் இலக்க 1993-03 15ஆம் தேதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க 600/- ரூபா மாதாந்தப் படியாகச் செலுத்தப்படும்.

9/93ஆம் இலக்க 1993-05 12ஆம் தேதிய பொது நிருவாக சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 600/- ரூபா மாதாந்தப் படியாகச் செலுத்தப்படும்.

இப்பல்கலைக் கழகத்தின் மக்கள் வங்கியின் அல்லது திருமலையில் முகப்பு மேசையில் 20/- ரூபா வைப்பாகச் செலுத்தி இப்பல்கலைக்கழக தரவரிசையின் விரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெறவிரும்புவோர் 23X10 செ. மீ. அளவுடைய சுய முகவரி இட்ட முத்திரையொட்டப்பட்ட ஒரு உறையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான வரைவு மட்டுமே / தாற் கட்டளையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க, திணைக்கள, அரச கூட்டுத்தாபன, நிதி சபை சபையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தத்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு விண்ணப்பிக்கலாம் அவ்விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 70ஆகும். ஓய்வுபெற்ற ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் ஓய்வு பெறும்போது கடைசியாகப் பெற்ற சம்பளம் செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-06-21

(ஏ-4168)

"மரத்தை நட்டால் - நல் வளத்தை பெறலாம்"

வலுக் குறைந்தோருக்கான மறுவாழ்வு

வலுக்குறைந்தோர் மறுவாழ்வு இல்லம்

ஆதரவற்ற வலுக்குறைந்தவர்கள் சுயதொழில் பயிற்சிபெற்று மறுவாழ்வுபெற எம்மால் இல்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வில்லத்தில் தங்கியிருந்து மறுவாழ்வு பெற விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

நோயாளர் நலன்புரி சங்க செயலகம்,

யாழ். அரசினர் பொது மருத்துவமனை.

(ஏ-1101)

உ

சிவமயம்

திருமண அழைப்பு

நிகழும் மன்மத வருடம் ஆனி மாதம் 12ம் திகதி (26-06-1994) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி — 10-30 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

எமது கிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
யோக ஜெகதீஸ்ரவன்
ஜெகன் (ஜேர்மனி)
அவர்கட்கும்

எமது ரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
வளர்மதி (கிரிஜா)
(முன்னாள் உதவி நூலகர் பருத்தித்துறை பிரதேச சபை புலோலி நூலகம்)
அவர்கட்கும்

திருமணச் செயலாற்ற இறைவன் திருவருளைத் துணைக்கொண்டு பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள். ஜேர்மனியில் நடைபெறும் இவ் வைபவத்தை ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அன்பர்களும் மானசீகமாகவும் மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்

திருமணம் நடைபெறும் இடம்: HERIBURG STR 17
48429 RHEINE
GERMANY.

இங்ஙனம்

S. V. சிவசுப்ரமணிய தேசிகரும் பிள்ளைகளும்
KIRCH STR 12, A
35688 DILLENBECRG
GERMANY

வ. வே. நவரத்தினக் குருக்களும் மாரியாரும் குடும்பத்தாரும்
வரதராஜகர் தேவஸ்தானம்
துப்பல்
பருத்தித்துறை.

(ஏ-4169)

மணிவாக்கு

ஒரு மிருகங்கள் காப்பாற்றினால் ஒரு தனிப்பட்ட உயிரைக் காப்பாற்றினதாகும். ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் ஒரு பரம்பரையைக் காப்பாற்றினதாகும்.

— ஜட்கிஸ்மித்.

நமது நோக்கு

சிந்தனை எதிலே?

விடுதலைக்-கிழக்குப் பிரச்சனை பற்றிய சிந்தனை விட, தேர்தலில் வெற்றிபெறுவது எப்படி என்ச் சிந்தித்துச் செயற்படுவதிலேயே ஆளும் கட்சியினரும், எதிரணியினரும் முனைப்பாக இருக்கிறார்கள் என்ச் சொழும்புப் பத்திரிகை ஒன்று கண்டிப்பீடு செய்துள்ளது.

இது இன்றைய நிலை மாத்திரமா? கடந்தகால வரலாறு என்ன?

1970ல் — மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற சுதந்திரக்கட்சி அரசினர் நாட்டின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்திருந்தால், இனப் பிரச்சினையை எதிர்நோக்கி தீர்த்திருக்கலாம்.

ஆனால், ஏற்கனவே சிறுபான்மையினருக்கு இருந்த பாதுகாப்பான 29 (2 பிரிவை நீக்கி, புதிய யாப்பினை உருவாக்கி தமிழர்களை நிரந்தர அடிமைகள் ஆக்கினார்கள்.

1977ல் — ஐந்தில் நான்கு பெரும்பான்மை பலத்தோடு ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தபோது, பிரச்சினையை அதன் எதிர்ப்பின்றித் தீர்த்திருக்கமுடியும். ஆனால் சிந்தனை எதிலே சென்றது? வெற்றிக்களிப்பில், "ஒரு பாடம்" படிப்பிக்க வேண்டும் என்ற ரீதியிலே 1977 ஆகஸ்ட் கலவரம் நடந்தேறியது. இந்தப் பாடத்தோடு முற்றாக உண்மை வேண்டும்உணர்ச்சி அடக்கிப் போய்விடும் என்றுதான் கனவு கண்டார்கள்.

ஆனால், நடந்தது என்ன?

7-9-78ல் — சபாநாயகர் கணக்கிட்டு காலை 10-20 க்கு. புதிய யாப்பின்படி ஜே. ஆர். நாடாளுமன்றத்தில், சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தார். அந்த மேசையில் — கண்ணாடி சாடியில் — ஒரே தண்டில், பச்சை இலைகளுக்கு மேலாக ஒற்றை ரோஜா பலரது கவனத்தையும் கவர்ந்தது.

8-9-78ல் வெளிவந்த "டெய்லி மிரர்" பத்திரிகையில் அந்தப் படத்தையும் போட்டு, ரோஜா மலர் செய்தியாக்கப்பட்டது. தனித் தலைவனாக விளங்குவார் எனக் கணிப்பீடு செய்யப்பட்டது.

ஆனால், அதே முதற்பக்கச் செய்திகளை-ஜனாதிபதியாகும் பதவிக்கு ஒரு சற்று முன்பாகவே, இரத்மலானையில் அவ்ரோ விமானவெடிப்பினால், தீக்கரையாகி தெரிந்தது. உச்சக்கிளர்ச்சி உணர்வு அடங்கிப் போய்விடுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகக் கூறியதா அந்தச் செய்தி?

சுவிஸிலிருந்து முதல் தமிழ் அகதி இலங்கை வந்து சேர்ந்தார்

திருப்பி அனுப்பும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதி ஒரு திருப்பி அனுப்பும் சுவிஸ் அரசின் திட்டத்தின் கீழ், முதலாவது தமிழர் கடந்த வாரம் விமானமூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப் பட்டார்.

கடந்த இரு வருடங்களாக சுவிஸில் தங்கியிருந்த தங்கராசா என்ற வாலிபரே, முதலாவதாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த மேற்படி வாலிபர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் அழைத்துச் சென்றதாக, செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த கட்டமாக தமிழ் அகதிகள் தொகுதி தொகுதியாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாமென பல சேவைகள் விடுக்கப்பட்டபோதும் சுவிஸ் அரசு அவற்றை புறக்கணித்து தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பத்தொடங்கியுள்ளது. (வீ-கி)

தெ ஆபிரிக்காவுக்கு மீண்டும் ஐ. நா. சபையில் இடம்

(ஜோகன்ஸ்பேர்க்)

தென் ஆபிரிக்கா மீண்டும் ஐ. நா. சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முழுஉறுப்பினராகச் செயல்பட தென் ஆபிரிக்காவுக்கு உரிய நாடுகள் உதவியாக வேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் சமவுரிமை பற்றுபற்றக் கூடிய தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெற்று புதிய ஆட்சி அமைக்கப்பட்டபின் ஐ. நா. வில் தெ ஆபிரிக்காவுக்கு இடம் கிடைத்துள்ளது (ம-கி)

குளம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கில் உள்ள இலந்தைக்குளம் வாழ். மாநகரசபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது

இக்குளத்தில் மழைநீரைத் தேக்கி வைக்கும் முகமாக ஏவே இக்குளம் ஆழமாக்கப்பட்டு வருகிறது. -154

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை-வேலாயுதம் ஸ்ரீ அந்தோனியார் பிரசுர வாரம் (கீரிப்பிள்ளையார்) கோவில் மஹா கும்பாபிஷேகம் இன்று 25-ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும்.

இரண்டாம் நாள் எண்ணெய்காப்பு நிழ்ச்சியுடன் தொடர்ந்து 27-ம் திகதி மகா கும்பாபிஷேகமும் நடைபெறும். -162

0 0

(யாழ்ப்பாணம்)

சுன்டுக்குளி மகா. யோகர் ஆலய கண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 8-30மணி தொடக்கம் "இறை மக்கள், மேய்ப்பன், மந்தை, மேய்ப்புப் பணி" என்னும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளர் அருள்கலாநிதி ஐ. எச். விக்டர், அருட்கலாநிதி அன்ரன் பத்தாயர் ஆகியோர் உரை வழங்குகின்றனர். (ம)

உலக கிண்ண போட்டி இன்றைய ஆட்டம்

(லோஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் நடைபெற்று வரும் உலக கிண்ண உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் வருமாறு:

முதல் ஆட்டத்தில் பெல்ஜியம் எதிர் ஸ்பெயினும், 2-ம் ஆட்டத்தில் சவூதி அரேபியா எதிர் மெக்சிகோவும் 3-ம் ஆட்டத்தில் ஆர்ஜன்ரீனா எதிர் நைஜீரியாவும் மோதுகின்றன.

மேற்படி ஆட்டங்களில் மோதும் அணிகள் 2-ம் சுற்றுப் போட்டிகளில் விளையாடுகின்றன. -இ

இராசி பலன்

25 06 - 1994

சனிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 11

தகவல: பி. ப 2-40 வரை: உத்தராடம் பி. இ. 1-5 வரை: கிழமெல்லாம் இராகுகாலம் காலை 8-55 முதல் 10-25 வரை: எமகண்டம் காலை 2-55 முதல் 4-25 வரை.

மேடம்: வீண் விரோதம், பொருள் சேர்க்கை, தொழில் மேம்பாடு.

இடபம்: வீண் விரோதம், பொருள் சேர்க்கை, தொழில் மேம்பாடு.

மிதுனம்: காரிய தடை, கண்ணீர்விடும் சம்பவம், நஷ்டமுறவு.

கடகம்: இல்வாழ்வில் இன்பம், தொழில் சிறப்பு, பயண அனுபவம்.

சிங்கம்: தெய்வ அனுகூலம், கல்வி மேன்மை, புதிய முயற்சி.

கன்னி: மகிழ்ச்சி நலம்தரும், காரியத்தடை, மனப்போராட்டம்.

துலாம்: அடிமை நிலை, அதிகாரிகளால் துயர், பணக் கஷ்டம்.

விருச்சிகம்: வெளிநாடு பயணம், மகிழ்ச்சி ஆதரவு, பாராட்டு.

தனுசு: மனோ விசாதி, ஆரோக்கியக்குறைவு, செலவு கூடுவது.

மகரம்: தொழில் அனுகூலம், தனவரவு, சுபகாரியச் செலவு.

கும்பம்: பகைவர்கள் விரோதம், மனப்பீதி, அதிக யோசனை.

மீனம்: விரோதிகள் உதவி, உயர்ந்தோர் நட்பு, தெய்வ சிந்தனை.

ஜோஸ்யர்

45 வருடங்கள் ஆகியும் விசாரணைக்கு வராத வழக்கு

(திருகோணமலை

இலங்கை நீதிமன்றத்தினால் ஒரு வழக்கு 45 வருடங்கள் சென்றும், விசாரணைக்கான எடுக்கப் படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

எம். ஐ. ஏ ரகுமான் என்பவர் மரணசாசனமின்றி இறந்ததினால், அவரது சொத்துகளுக்கு உரிமையோரி அவரது மனைவி திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கே விசாரிக்கப்படாமல் இருக்கிறதாம்.

இந்த வழக்கு 1948 ஆகஸ்டு மாதம் 15ம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. வழக்குத் தாக்கல் செய்த 200 சொத்துக்களில் பல சொத்துக்கள் இருக்குத் தெரியாமல் விற்கப்பட்டு உள்ளன என்று கூறப்படுகிறது. (ம)

வங்கிக் கடன் திட்டம் பற்றி இன்று கருத்தரங்கு

(உடுவில்)

கருவலகஸ்தோட்டை சண்முகா சபை அபிவிருத்திச் சங்கக் கடன் திட்டங்களுக்கு கிராமிய நிறுவனங்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்படுகிறது.

இக்கருத்தரங்கு முதலாவது தொடர் இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு வருவூர்வடக்கிலுள்ள வாழ்வரணக்கல்லூரி விவசாய நிறுவனத்தில் சபைத் தலைவர் திரு தி. ஞானேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வமர்வில், கன்னாகம் இலங்கை வங்கியுடன் பணிபுரிந்து வந்த வெளிவளவாளர் கலந்து கொள்வார்.

இலங்கை வங்கி வாழ்வரணக் கிளை 'மாவலிக் பிரதேச முகாமையாளர் திரு. சே. சுரேசமூர்த்தி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

வங்கிக்கடன் பற்றிய அறிமுகத்தை கன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். விக்கினராசாவும், அபிவிருத்திக் கடன் திட்டங்கள் பற்றி திரு. எஸ். சிவராஜ் தினமும் வாழ் மாவட்டக் கடன் அதிகாரி திரு எஸ். சந்திரானந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். -109

மாணவருக்கான விவசாய அறிவுப் போட்டி

(உடுவில்)

இன்று 25ம் திகதி நடைபெற இருந்த விவசாய அறிவுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஜூலை மாதம் இரண்டாம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக விவசாய உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆண்டு 9 முதல் 11 வரையான வகுப்புகளில் கல்வியிலும் மாணவர்கள் ஐந்து பேர் இப்போட்டிகளில் பங்கு கற்றலாம்.

போட்டி மண்டபத்தில் நடைபெறும் போட்டிகளை தொடர்ந்து அதில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்கள் கலைமகிட பிரதேச போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப் படுவர்.

உடுவில், சோப்பாய் போட்டிகளுக்கு இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை, சிவகரன், சண்டிலிப்பாய் போட்டிகளுக்கு சிவகரன் கிளிப்பிரசாத மகா வித்தியாலயத்திலும், வரணி போட்டிகளுக்கு நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் தெற்றிக்கேணி பரமேஸ்வரன் கல்லூரியில் கருதக்கேணி போட்டத்திற்கும் போட்டிகள் நடைபெறும். -109

உலகமும் பத்தும்

காஷ்மீரில்----

முன்னொரு காலத்தில் இந்தியா எங்கும் சமாதானம் நிலவியிருந்தது. கடந்த இந்தியாவில் காஷ்மீர் சாவகம் என்றும், மைசூரின் வீர சாவகமென்றும், தமிழ் நாட்டின் சாவகித்தரத்தம் என்றும் அது வேறுபட்டது

காஷ்மீரில் இந்து அரசனின் குலதெய்வக் கிளியானி ஆலயம். அந்த ஆலயக் கோயிலைச் சுற்றியுள்ள குளத்தில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிக்குப் பிறகு குளத்து நீரின் நிறம் வெள்ளை நிறமாக மாறுமாம்!

காஷ்மீரில் உயர் இந்து குடும்பத்தைச் சேர்ந்த சேகு குடும்பத்தினர் அரசாங்கத்திற்கு வேறாவது குறிப்பிடத்தக்கது

—மயூரன்

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-06-25 சனி இரவு

08-01 அறிவிப்பு கலசம்
08-10 தாயகம் வாடகைகள்
08-22 நேயர் விருப்பம்
08-30 செய்திகள்
08-40 கிந்திரம் "பிறந்தது புதுயுகம்"

1994-06-26 ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 வைத்திய மலர்த்தலை
07-30 செய்திகள்
07-30 பத்திரிகை செய்திகள்
07-40 சவாலுக்கு மலர்த்தலை நிழ்ச்சிகள் தொடர்ச்சி

வட கிழக்கிலே, இராணுவத்தை வைத்துக் கொண்டு பயங்காட்டிக் கொண்டு, பதவியில் அமர்வதற்கான தேர்தல் பற்றியே சிந்தனை செல்கிறது, இன்று — தேர்தல் மகாநாட்டில் சிந்தனை செறிவு சொற்தர் வாரிக் நிற்கும் பணி தொடர வேண்டுமல்லவா?

தீ எனக் பெண்ணே எழுந்திரு சீதனக் கேயினை எரித்திடு

நல்லூர் இணையம்.

டி.பி. கொடும்பாகி எரிப்பு, ஆர்ப்பாட்டம்

இல. படையினரின் தாக்குதலை கண்டித்துதொடர்ந்துமறியல்!

- தமிழக மீனவர் போர்க்கோலம் -

(செய்தி)

இந்திய மீனவர்கள் இலங்கைப் படையினரால் தாக்கப்படுவதை நிரந்தரமாக நிறுத்தும்படியும் சம்பவங்களை மீண்டும் வலுக்கும் படியும் மாநிலமெங்கும் கிளர்ந்தெழுந்து பல கட்டப் போராட்டங்களை நடத்த தமிழக மீனவ இளைஞர் முன்னணி திட்டமிட்டுள்ளது.

மத்திய அரசு இந்த விடயத்தில் மெத்தனமாக இருந்தால் தமிழகத்திலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன்னால் தொடர்ந்து மறியல் போராட்டம் நடத்தப்படும். ஆர்ப்பாட்டம் இலங்கை ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டங்களும் நடத்தப்படும் என்றும் இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

சாலைகளில் கவிழ்மரங்களைப் போட்டு வலைகளை எரித்து மறியல் செய்வோம். இராமேசுவரம் செல்லும் துறைமுகங்களை மறித்து செல்லும் கப்பல்களில் போக்குவரத்து நடைபெறாது கோஷங்களை ஆரவாரம் செய்வோம் என்று தமிழக மீனவர் முன்னணி இழப்பு இந்திய அரசுக்கு ஏற்படுமென்றும் இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட்டுவரை சுமார் நூறு தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொன்றுள்ளதாகவும் இந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆயுதக் கொள்வனவில்

ஐ. தே. க. தேர்தல் செலவுக்கு எத்தனைகோடி போகிறது

- சுதந்திரக்கட்சி எம். பி. கேள்வி

(செய்தி)

ஆயுதக்கொள்வனவில் இடைபெறும் பணத்தோடு ரூபா பணமோசடியில் எவ்வளவு கோடி ரூபா ஐ.தே.க. கட்சி தேர்தல் செலவிற்கு செல்கிறது என்பது தெரியவில்லை என சுதந்திரக்கட்சி எம். பி. திரு. மி. வி. குணரட்ண நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

அவரது அவர் மேலும் கூறுகையில்: ஆயுதக் கொள்வனவில் பணத்தோடு ரூபா மோசடி இடம்பெற்று வருவதாக பல தகவல்கள் கூறப்படுகின்றன. இதுவரை எதுவித விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. மோசடி தொடர்கிறது.

தற்போது கிளைப்பூசலிலிருந்து தம்மை பல நாடுகளிலிருந்து ஆயுதங்களுக்கு ஓர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. மோசடி இடம்பெறுவது தெரிந்தும் இந்த ஓர்டர் வழங்கப்படுகின்றதாக அவர் கூறியுள்ளார். (கி-தி)

உலக கிண்ண போட்டி

பத்துப் பேருடன் இத்தாலி விளையாடி வென்றது!

(நியூயோர்க்)

நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இத்தாலி 1—0 கோல்கள் நோர்வேயை வெற்றிபெற்றது. தென். கொரியாவுக்கும்-பொலிவியாவுக்கும் மிலாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் இரு அணிகளும் கோல்கள் ஏதும் போடாத நிலையில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இத்தாலி-நோர்வே ஆடிடத்தில்போது இத்தாலி அணியின் கோல்காப்பு வீரர் முறைதவறி விளையாடியதால் மத்திய தர ஆட்டம் தொடங்கி பத்து நிமிடத்தின் பின்பு "பிரேப்பு" காட்டி வெளியேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. வி

கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ் போதையிலிருந்த தடுக் வாகனத்தில் இருந்தவர்களும் விசாரணைக்குட்படுத்தப்படபோது வாகனத்தில் இருந்த ஒருவர் சயனைட்டை உட்கொண்டார். இவர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அவர் அன்று மரணமானார்.

வாகனத்தில் இருந்த மற்றவர்கள் கொடுத்த தகவலின் பேரில் தெகிவளையிலுள்ள வீடு ஒன்றை படையினர் சோதனையிடபோது பெருந் தொகையான வெடிமருந்து என்பன கைப்பற்றினார்கள் என்றும் வீட்டில் இருந்த அனைவரும் . கைதுசெய்யப்பட்டனர் என்று பாதுகாப்புப்படையின் தகவல் செய்தி அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் மீண்டும் வாகன சோதனைகளும் சந்தேகத்துக்குரியவர்களை விசாரணை செய்யும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாய், சோமாய், உதிரிப்பூ, பருத்தித்துறை, சாமக்கோடி, நல்லூர் என்ன தேர்தல் தொகுதிகள். கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் புலிகளின் வசமுள்ளது. வாழ் மாவட்டத்தில் படையினர் கூடுமளவிற்கு உள்ள பகுதிகளில் மிகக் குறைந்தவையிலேயே மக்கள் உள்ளனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தில் நகர் பகுதி தவிர ஏனைய பகுதிகள் புலிகள் வசம் உள்ளது. வவுனியா மாவட்டத்தில் படையினர் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் தேர்தல் ஏற்பாடுகளை படையினர் மேற்கொள்ள புலிகள் விடமாட்டார்கள் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இந்திய அமைதிப் படையின் உதவியுடன் இரு தேர்தல்களும் நடத்தப்பட்டன. இவ்வாறானதொரு நிலை இம்முறை இல்லை. இவை பற்றி கொள்ளாக் இந்தத் மூழ 29-ம் திகதி ஆராயுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. கி-தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமது ராஜினாமாவுக்கான அறிக்கை ஒன்றை நேற்று வெளிவிடபின் இந்த கருத்தை பிக்களும் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினர்கள். ...இ

புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாய், சோமாய், உதிரிப்பூ, பருத்தித்துறை, சாமக்கோடி, நல்லூர் என்ன தேர்தல் தொகுதிகள். கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் புலிகளின் வசமுள்ளது. வாழ் மாவட்டத்தில் படையினர் கூடுமளவிற்கு உள்ள பகுதிகளில் மிகக் குறைந்தவையிலேயே மக்கள் உள்ளனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தில் நகர் பகுதி தவிர ஏனைய பகுதிகள் புலிகள் வசம் உள்ளது. வவுனியா மாவட்டத்தில் படையினர் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் தேர்தல் ஏற்பாடுகளை படையினர் மேற்கொள்ள புலிகள் விடமாட்டார்கள் எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இந்திய அமைதிப் படையின் உதவியுடன் இரு தேர்தல்களும் நடத்தப்பட்டன. இவ்வாறானதொரு நிலை இம்முறை இல்லை. இவை பற்றி கொள்ளாக் இந்தத் மூழ 29-ம் திகதி ஆராயுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. கி-தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை.

வடக்கில் இருதேர்தல்களை ஒரு நடாத்த வேண்டுமாயின் அப்பகுதியை படையினர் கைப்பற்ற வேண்டும். இந்த நிலையில் அப்பகுதியை கைப்பற்ற படையினர் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அந்த அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இரு தேர்தல்களும் ஒரு முன் இவ்வாறானதொரு நடவடிக்கைகளை இராணுவத்தரப்பு நடாத்துவதும் சாத்தியமற்றதெனவும் அவர் தெரிவித்தார். (கி-தி)

அனுரா - தொண்டா நேற்று சந்திப்பு

(தொழுவிப்பு)

உயர்கல்வி அமைச்சரும், தேசிய நல்லிணக்க அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க கிறிபத்கொட இனற் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

இதன் கீழ் அவர் நேற்று கற்றுவா கிராமிய வைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமானை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது மலைநாட்டு சமூகங்களின் எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இதனைவிடுத்து அவர் மற்றும் பல தலைவர்களையும் சந்திக்கவுமுள்ளார். இ-தி

பொன்னாலைநோக்கி ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை கடற்கரையிலிருந்து பொதுமக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை இக்கடற்பகுதியை வந்த கடற்படை பீரங்கிப் படகுகளிலிருந்தே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதே சமயம் காலை நாலரை மணியிலிருந்தும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக்காலை பத்து மணியளவில் மண்டைதீவு பகுதியிலிருந்து வாழ்குடா வரை பல்வேறு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையக மீதான ஒன்றுதாக்குதல் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —இ

கலந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனைகளும் நிராகரிக்கப்படக் கூடாது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த அனைத்து தலைவர்களும் தேர்தல் ஜனாதிபதி பி. விஜேதுங்கவுக்கு கடிதம் மூலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர். —இ-தி

கபசபாநாயகருக்கு

1ம்- பக்கத் தொடர்ச்சி)

வும் தங்கமை நாங்கள்விட்டு வெளியேறுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் இது குறித்து நாம் யாருக்கும் தகவல் விடுக்கவில்லை எச்சரிக்கை பற்றி தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

அவரைக் காலமாக திருமாமினி பொன்சேகா ஐ.தே.கவில் பெரும் பிரச்னைகளுக்கு மனிதராக இருந்து வருவதாக குறிப்பிடத்தக்கது. கி-தி

ஐ. நா. பாதுகாப்பு சபையிலிருந்து

இலங்கை வாபஸ்!

(தொழுவிப்பு)

ஐ. நா. பாதுகாப்புச்சபையில் இடம் பெறுவதிலிருந்து இலங்கை அதனை வாபஸ் பெறவுள்ளது.

தென்கொரியாவுக்கு ஆதரவாகவே இலங்கை தனது வேட்பாளரை வாபஸ் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் பதவிக்காக போட்டியிட முதலில் இலங்கை ஒரு வேட்பாளரை நிறுத்தியிருந்தது.

தென்கொரியா அரசு இது குறித்து இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்டப் பேச்சுக்கள் நடாத்தியிருந்தது. இதன் போது தனது நாடு மேற்படி பதவிக்கு போட்டியிட இருப்பதாகவும் அதற்கு ஆதரவு வழங்குமாறு கோரியிருந்ததாகவும் இலங்கை தனது முடிவை மாற்றியுள்ளது.

அங்கையில் தென்கொரியா சென்ற பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கவும் இதுபற்றி கலந்துரையாடினார். மேலும் வேறொரு சந்தர்ப்பத்தில் பாதுகாப்புச்சபைக்கு போட்டியிடுவதெனவும் இலங்கை முடிவு செய்துள்ளதாக. கி-தி

தேர்தலுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை.

வடக்கில் இருதேர்தல்களை ஒரு நடாத்த வேண்டுமாயின் அப்பகுதியை படையினர் கைப்பற்ற வேண்டும். இந்த நிலையில் அப்பகுதியை கைப்பற்ற படையினர் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அந்த அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இரு தேர்தல்களும் ஒரு முன் இவ்வாறானதொரு நடவடிக்கைகளை இராணுவத்தரப்பு நடாத்துவதும் சாத்தியமற்றதெனவும் அவர் தெரிவித்தார். (கி-தி)

நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை திகதி முதல் 11-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அடுத்த வாரம் முதல் தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் எனவும் அந்த விஷேச வர்த்தமானியில் அறிவிக்கப்படுகிறது

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் அக்டோபர் அல்லது நவம்பர் மாதமளவில் நடைபெறும்.

தற்போதைய நாடாளுமன்றம் 1989-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டது. எதிர்வரும் செப்ரவர் மாதம் வரை இந்த நாடாளுமன்றம் தொடர்ந்தும் பதவியில் இருக்க முடியும்.

எனினும் ஆறு மாதங்களுக்கு முன் கலைக்கப்படும் நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு பொதுத்தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அறிப்பு விடுத்துள்ளார் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

அரசியல் லாபம் கருதியே அரசு நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த முடிவு எடுத்துள்ளதாக எனினும் நாம் தேர்தலை எதிர்நோக்கத் தயாராகவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது. —இ-தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1977ம் ஆண்டுக்குப் பின்பு இம்முறை நாடே ஆகியவைப்பற்றுமோம் என்று எதிர்க்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. கி-தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி பி ஸி மேலும் தெரிவித்தது.

ஐ. தே. கட்சி ஊழல் நிறைந்த நிர்வாகத்தையும் கொடுங்கோல் ஆட்சியையுமே கடைபிடித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் திருமதி சந்திரிகா குமாரதுங்கவும் கூடியிடதாக சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய ஆறு உறுப்பினர்களும் குற்றம் சாட்டுகின்றார்கள். இதே நேரம் இக்கட்சியின் தலைவர்பீடத்தை திருமதி சந்திரிகாவிடம் ஒப்படைக்கும் படி ஒரு சாரார் கூறியுகின்றார்கள்.

எதுவாகஇருந்தாலும் அங்கையில் முடிவடைந்த தென். மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி பெற்ற பெரும் வெற்றியால் 1977ம் ஆண்டுக்குப் பின்பு இம்முறை நாடே ஆகியவைப்பற்றுமோம் என்று எதிர்க்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. கி-தி

நாடாளுமன்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது ராஜினாமாவுக்கான காரணத்தை வாசித்து பேசிக் கொண்டிருந்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களிடமிருந்து அமைச்சுப் பதவி இடைநீக்கம் ஏற்பட்டன.

இந்தச் சமயத்தில் ஆளும் கட்சி தரப்பினரும் குறுக்கிடு எதிர்க்கட்சியினருடன் பலத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது.

நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர சபை நடவடிக்கைகள் அரைமணி நேரம் ஒத்திப் போடப்பட்டன. இ

இயற்கையான "ஈழநாடு" விலிருந்தெடுக்கப்பட்ட வாழ்ப்பாணம் கோட்டை வீதி, 93-ம் இலக்கத்திலுள்ள அமர்வது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிடப் பெற்றது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number W/10334/2